ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கைம்மானம் ॥

*This document* has been prepared by*

**Sunder Kidambi**

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கைம்மானம் ॥

## திருவரங்கம் - 3

‡கைம் மான மழ களிற்றைக்⋆ கடல் கிடந்த கருமணியை⋆
மைம் மான மரகதத்தை⋆ மறையுரைத்த திருமாலை⋆
எம்மானை எனக்கென்றும் இனியானைப்⋆ பனி காத்த
அம்மானை⋆ யான் கண்டது⋆ அணி நீர்த் தென் அரங்கத்தே (1)

பேரானைக்⋆ குறுங்குடி எம் பெருமானை⋆ திருத்தண்கால்
ஊரானைக்⋆ கரம்பனூர் உத்தமனை⋆ முத்திலங்கு
கார் ஆர் திண் கடல் ஏழும்⋆ மலையேழ் இவ்வுலகேழ் உண்டும்⋆
ஆராதென்றிருந்தானைக்⋆ கண்டது தென் அரங்கத்தே (2)

ஏன் ஆகி உலகிடந்து⋆ அன்றிரு நிலனும் பெரு விசும்பும்⋆
தான் ஆய பெருமானைத்⋆ தன் அடியார் மனத்தென்றும்⋆
தேன் ஆகி அமுதாகித்⋆ திகழ்ந்தானை மகிழ்ந்தொருகால்⋆
ஆன் ஆயன் ஆனானைக்⋆ கண்டது தென் அரங்கத்தே (3)

வளர்ந்தவனைத் தடங்கடலுள்⋆ வலி உருவில் திரி சகடம்⋆
தளர்ந்துதிர உதைத்தவனைத்⋆ தரியாதன்றிரணியனைப்
பிளந்தவனை⋆ பெரு நிலம் ஈர் அடி நீட்டிப்⋆ பண்டொருநாள்
அளந்தவனை⋆ யான் கண்டது⋆ அணி நீர்த் தென் அரங்கத்தே (4)

நீர் அழலாய்⋆ நெடு நிலனாய் நின்றானை⋆ அன்றரக்கன்
ஊர் அழலால் உண்டானைக்⋆ கண்டார் பின் காணாமே⋆
பேர் அழலாய்ப் பெரு விசும்பாய்ப்⋆ பின் மறையோர் மந்திரத்தின்⋆
ஆர் அழலால் உண்டானைக்⋆ கண்டது தென் அரங்கத்தே (5)

தஞ்சினத்தைத் தவிர்த்தடைந்தார்⋆ தவ நெறியை⋆ தரியாது
கஞ்சனைக் கொன்று⋆ அன்றுலகம் உண்டுமிழ்ந்த கற்பகத்தை⋆
வெஞ்சினத்த கொடுந் தொழிலோன்⋆ விசையுருவை அசைவித்த⋆
அஞ்சிறைப் புள் பாகனை⋆ யான் கண்டது தென் அரங்கத்தே (6)

சிந்தனையைத் தவநெறியைத்⋆ திருமாலை⋆ பிரியாது
வந்தெனது மனத்திருந்த⋆ வடமலையை⋆ வரி வண்டார்
கொந்தணைந்த பொழில் கோவல்⋆ உலகளப்பான் அடி நிமிர்த்த
அந்தணனை⋆ யான் கண்டது⋆ அணி நீர்த் தென் அரங்கத்தே (7)

துவரித்த உடையவர்க்கும்⋆ தூய்மை இல்லாச் சமணர்க்கும்⋆
அவர்கட்கங்கருள் இல்லா⋆ அருளானை⋆ தன் அடைந்த
எமர்கட்கும் அடியேற்கும்⋆ எம்மாற்கும் எம் அனைக்கும்⋆
அமரர்க்கும் பிரானாரைக்⋆ கண்டது தென் அரங்கத்தே (8)

பொய் வண்ணம் மனத்தகற்றிப்⋆ புலன் ஐந்தும் செல வைத்து⋆
மெய் வண்ணம் நினைந்தவர்க்கு⋆ மெய்ந் நின்ற வித்தகனை⋆
மை வண்ணம் கரு முகில் போல்⋆ திகழ் வண்ண மரதகத்தின்⋆
அவ்வண்ண வண்ணனை⋆ யான் கண்டது தென் அரங்கத்தே (9)

‡ஆ மருவி நிரை மேய்த்த⋆ அணி அரங்கத்தம்மானை⋆
காமரு சீர்க் கலிகன்றி⋆ ஒலி செய்த மலி புகழ் சேர்⋆
நா மருவு தமிழ் மாலை⋆ நால் இரண்டோடிரண்டினையும்⋆
நாமருவி வல்லார் மேல்⋆ சாரா தீவினை தாமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥